கூட்ட எண் 01
2019 - 2020 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.05.2019.

2019-ம் ஆண்டு மே மாதம் 31.05.2019 ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி, மார்ச், மற்றும் ஏப்ரல் 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி, மார்ச், மற்றும் ஏப்ரல் 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018 - 2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 05.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியினி விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி அருணகரி சத்திரம் பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் | 8.00 | சக்தி கன்ஸ்ட்ரக்சஷன்ஸ்<br>எஸ். உஷாராணி | 0.04% குறைவு<br>3.10 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்குறிபிட்டுள்ள பணியின் அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கி[யுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 3332/இ1/2018)

4. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் வாகனம் வண்டி எண் TN25AX9318 ஆயில் சர்வீஸ் மற்றும் கிளர்ச் பிளேட் பழுது ஏற்பட்டு இயக்க முடியாமல் உள்ளது. மேலும், மேற்படி பணிகளை வாகனம் கொள்முதல் செய்த நிறுவனமாக ஜெயின் கார்ஸ் & ஆட்டோ சேல்ஸ் பி.லிட் திருவண்ணாமலை நிறுவனத்தில் விட்டு ஆயில் சர்வீஸ் மற்றும் கிளர்ச் பிளேட் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 36850.00க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேலும், மேற்படி பணியின்அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 533/2019/இ1)

5. 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் கண்காணிப்பாளர் அவர்களின் அறிவுரையின்படி, இந் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த கட்டடங்களில் அரசியல் சம்மந்தமான விளம்பரங்களை பிரைமர் பெயிண்ட் அடித்து அதன் மேல் இருமுறை ஆயில் பெயிண்ட் அடித்து அழிக்கும் பொருட்டு, தேர்தல் அவசர அவசியம் கருதி உடனடியாக செய்திட நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததார்களிடம் விலைப்புள்ளி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை செய்து முடிக்கப்பட்டது. அதற்கான செலவினம் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்படி, வருவாய் நிதியின் கீழ் ரூ.163248/- செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்படி செலவினத்திற்கு மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

6. தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் ஆரணி நகர MCC மையங்களுக்கு மாசுகட்டுபாட்டு வாரியத்தில் தடையின்மைச் சான்று பெற 5 MCC மையங்களுக்கு TOPO PLAN, LAYOUT PLAN தனித்தனியாக தயாரித்து அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி, 5 MCC மையங்களுக்கு TOPO PLAN, LAYOUT PLAN தனித்தனியாக தயாரித்து அளிக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | SKM DESIGN NO.16 உசேன் காம்ப்ளக்ஸ், பள்ளிக்கூடத் தெரு, (பழைய பேருந்து நிலையம்) ஆரணி | ரூ. 72000/- |
| 2 | சத்தியா & பிரதர்ஸ், 87எ சத்தியமூர்த்தி ரோடு, ஆரணி. | ரூ. 75200/- |
| 3 | ராஜெஷ் LBS,1135/பி மில்லர்ஸ் ரோடு, அண்ணா நகர், பையூர், ஆரணி | ரூ. 75600/- |

SKM DESIGN, பள்ளிக்கூடத் தெரு, ஆரணி என்பவர் ரூ.72000/-க்கான குறைந்த விலைப்புள்ளியை அளித்ததை மன்றம் ஏற்கலாம்.. மேலும், தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் MCC மையங்களுக்கு, மாசுக்கட்டுபாட்டு வாரியத்தில் தடையின்மைச் சான்று பெறும் பணியின் அவசர அவசயிம் கருதி விதி 15ன்படி, பணி மேற்கெண்டதை அனுமதிக்கலாம். மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 659/எப்1/2019)

7. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்கள் கடிதம் ந.க.எண் 2833/இ4/2018 எண் 02.05.2019 ன்படி நகர பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் பாதிக்காத வகையில் ஏற்கனவே செய்து வரும் டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணியாளர்கள் 02.05.2019 முதல் 31.07.2019 வரை மூன்று மாதங்களுக்கு 30 தற்காலிக பணியாளர்கள் நியமித்து டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நிர்ணயித்த தினக்கூலி ரூ.280/- என்ற அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ. 7.56 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- பொது சுகாதாரம் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய் தடுப்புப்பணி அத்தியாவசியம் என்பதால், 02.05.2019 முதல் 31.07.2019 வரை தற்காலிக பணியாளர்கள் பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 1537/2012/எச்1)

8. இயக்குநர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை -25 அவர்களின் கடிதத்தில், ஆரணி நகராட்சியில் தற்பொழுது நடைபெற்று வரும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஒன்றான ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வேலப்பாடி எருகிடங்கில் உள்ள திடக்கழிவுகளை அறிவியில் ரீதியாக அப்புறப்படுத்தும் பணிக்காக பின்வருமாறு பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| »» | நகராட்சி அலுவலர்களுடனான தள ஆய்வு மேற்கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி Bio Mining பணி மேற்கொள்ள ஒருங்கிணைப்பு, தேவையான இலக்குகள், அனுமானங்கள் குறித்து வரையறுத்தல். |
| »» | Bio Mining பணிகள் மேற்கொள்ள தொழில் நுட்ப ரீதியாக வழிகாட்டுதல் |
| »» | மேற்படி திட்டத்தின் பணி முன்னேற்றம் குறித்து தள ஆய்வுகள் மேறகொண்டு கண்காணித்தல் உட்பட தொழில் நுட்ப முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துதல், மற்றும் பணிகள் அனைத்தும் முடிவுற்றவுடன் தொடர்புடைய மரபு வழி கழிவுகளை உயிரியளவில் தொடர்பான வேலைகள் குறித்து சான்று வழங்குதல். |

மேலும், அண்ணா பல்கலைக் கழகம் சென்னையிலிருந்து வல்லுநர் குழு மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ளவும் ஆரணி நகராட்சிக்கு வந்து செல்லவும் பயணக்கட்டணம் மற்றும் கலந்தாய்வு கட்டணமாக ரூ. 3,50,000/- GST (18%) :ரூ. 63.000/- ஆக மொத்தம் ரூ. 4,13,000/- செலுத்தவும், அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 999/2016/இ1)

9. திருமதி. B. லட்சுமி க/பெ லேட், பாஸ்கர் கதவு எண் 15/17 பாஸ்கர் நகர், ஆரணி அவர்களின் நகராட்சி எல்லைக்குட்பட் வார்டு சி, பிளாக் -1 நகரளவு எண் 14/1பி-ல் (சர்வே ஆவணங்களின்படி ஏரிக்கால்வாய் என்று உள்ளது) உள்ள ஆக்கிரமிப்பை அப்புறபடுத்தக் கூடாது என தெரிவித்து WP No. 28967/2018 IN WMP NO. 33853/2018ல் நகராட்சி ஆணையாளரை 2ஆம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி தரப்பில் ஆஜராக நகராட்சி வழக்கறிஞர் திரு. பால்ராஜ் அவர்கள் இடைக்கால தடையை நீக்கவும் வழக்கறிஞர் கட்டணம் ரூ. 17000/-(ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) வழங்கமாறு கோரியுள்ளார். எனவே, வழக்கறிஞர் கட்டணம் ரூ. 17000/- வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் வழங்கலாம். அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 3299 /2018 /எப்1

10. வழக்கு WP(MD)No. 6052/2019ல் திரு. ராஜாராம் என்பவர், தனது பணி தொடர்பாக ஆரணி நகராட்சி ஆணையாளரை 4வத எதிர்வாதியாக சேர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆரணி நகராட்சி சார்பில் ஆஜராகி வாதிட திருமதி பத்மாதேவி சிறப்பு அரசு வழக்கறிஞர் மதுரை கிளை என்பவருக்கு வழக்கு கட்டணம் ரூ. 9500/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வழக்கினை நடத்திட மேற்படி வழக்கறிஞர் அவர்களுக்கு தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 1056/சி1/ 2019)

11. ஆரணி நகராட்சியில் தமிழக அரசின் ஈராண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அரசு திட்டப்பணிகள், மற்றும் வளர்ச்சி பணிகள் தமிழக அரசின் ஈராண்டு சாதனைகள் குறித்து ஆரணி நகராட்சி சார்பாக கீழ்காணும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவினம் ரூ.86340/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினத் தந்தி | 06.03.2019 | ரூ. 20160,00 |
| 2. | தினகரன் | 03.03.2019 | ரூ. 23520,00 |
| 3. | தின மலர் | 07.03.2019 | ரூ. 20160,00 |
| 4. | தின சங்கு | 05.03.2019 | ரூ. 6000,00 |
| 5. | தின செய்தி | 09.03.2019 | ரூ. 10500,00 |
| 6. | மீடியா செய்தி | 07.03.2019 | ரூ. 6000,00 |
| | | | ரூ. 86340,00 |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

12. ஆரணி நகராட்சி பகுதியில் கடந்த 28.05.2019 அன்று திடிரென ஏற்பட்ட காற்று மழையின் போது ஏற்பட்ட இடி, மின்னல் காரணமாக அலுவலகம் அருகில் உள்ள டிரான்ஸ்பார்மர் மீது மின்னல் தாக்கியது. இதன் காரணமாக நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின் ஒயர்கள் எரிந்த பழுதடைந்து நகராட்சி அலுவலகம் முழுவதும் மின்சாரம் இல்லாத நிலை உள்ளது. மேலும், அலுவலகத்தில் உள்ள அனைத்து குளிர்சாதன பெட்டிகள், UPS இயந்திரம் ஆகியவை பழுதடைந்துள்ளன. எனவே, மேற்குறிப்பிட்ட பழுதடைந்துள்ள மின்சாதன பொருட்கள் உடனடியாக மாற்ற ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 2.25 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மனறம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

13. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 28ல் உள்ள நகராட்சி அனந்தபுரம் நடுநிலைப்பள்ளியில் மாணவ மாணவியர், கல்வித் திறன் மேம்படவும், தனியார் பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்திடவும், ஸ்மார்ட கிளாஸ் (SMART CLASS ROOM) அறை அமைத்திட அலுமினிய கதவுகள், குளிர் சாதனம் பொருத்திடவும் ஆகும் தோராய செலவினம் ரூ. 9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும, மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765 / 2019 / இ1)

14. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 16ல் உள்ள பழனி ஆண்டவர் கோயில் தெரு நடுநிலைப்பள்ளியில் மாணவ மாணவியர், கல்வித் திறன் மேம்படவும், தனியார் பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்திடவும், ஸ்மார்ட கிளாஸ் (SMART CLASS ROOM) அறை அமைத்திட அலுமினிய கதவுகள், குளிர் சாதனம் பொருத்திடவும் ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும, மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765 / 2019 / இ1)

15. ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32ல் உள்ள கோட்டை மைதானத்தை சுற்றிலும் பொது மக்கள் பயன்பாட்டிற்ககு நடைமேடை அமைக்கப்பட்டு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. கடந்த 07.05.2019 அன்று மின்விளக்கிற்காக பொருத்தப்பட்ட UG CABLE ஒயர்கள் (SHORT CIRCUIT) காரணமாக அனைத்து கேபிள்களும் எரிந்து விட்டன. இதனால் நடைமேடை சுற்றிலும் உள்ள மின்விளக்குகள் எரியவில்லை. மின்விளக்குளை உடன் சரிசெய்ய கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் தகவலின்படி, மேற்குறிப்பிட்டுள்ள பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 75000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765 / 2019 / இ1)

16. இந்நகராட்சி பொதுப் பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு,பொது சுகாதாரப் பிரிவு, மற்றும் நகரமைப்பு பிரிவு,ஆகிய பிரிவுகளுக்கு தேவையான அலுவலக பயன்பாட்டிற்கான படிவங்கள், பதிவேடுகள், சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, இதர வரிகள் வசூல் செய்வதற்கான ரசீதுகள், தபால் பதிவேடுகள், மற்றும் இதர பொருட்கள் பின்வருமாறு வாங்க வேண்டியுள்ளது.

| வ. எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வரி ரசீதுகள் | 50,000 |
| 2 | A4 பேப்பர் | 10ரிம் |
| 3 | லீகல் பேப்பர் | 30ரிம் |
| 4 | வருகை பதிவேடுகள் | 20 |
| 5 | தன் பதிவேடுகள் | 20 |
| 6 | உள்ளூர் தபால் பதிவேடு | 15 |

| | | |
|---|---|---|
| 7 | வெளியூர் தபால் பதிவேடு | 15 |
| 8 | PRICED STORE LEDGER | 5 |
| 9 | நூல் உருண்டை | 20 |

மேற்குறிப்பிட்டுள்ள அலுவலக பதிவேடுகள் ரசீதுகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்தில் நேரடியாக வாங்கி கொள்ளவும், அதற்கான உத்தேச தோராய செலவினம் ரூ.300000 /-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1143 / பி3 / 2015)

17. ஆரணி நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உபகரணங்கள் மற்றும் விளக்குகள் இருப்பு தற்போது மிகவும் குறைவாக உள்ளதாலும், கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழையின் காரணமாக சோடியம் மின்விளக்குகள் பழுதடைந்து எரியவில்லை. எனவே பொது மக்களின் நலன் கருதி உடன் பணியினை மேற்கொள்ள மேற்குறிப்பிட்டுள்ளவாறு தெருவிளக்கு மின்உபகரணங்கள் மற்றும் சோடியம் விளக்குகள் வாங்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

18. ஆரணி நகராட்சி பொறியியல் பிரிவில் அலுவலக உபயோகத்திற்காக ஜெராக்ஸ் மிஷின் கடந்த 2014 - 2015ம் ஆண்டு வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது. தற்போது ஜெராக்ஸ் மிஷின் மற்றும் அதில் உள்ள டிரம், டெவலப்பர், கிளினிங் பிளேடு மற்றும் டோனர் ஆகியவை பழுதடைந்து இயக்க முடியாத நிலை உள்ளது. எனவே, அதற்கான நிறுவனங்களில் நேரடியாக விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு :-

1. M/s S.Arithashree systems.
   Kalinjur Post. Katpadi - 632 006 - Rs. 27730 /-
2. M/s Xerography Solutions,
   Rangapuram, Vellore - 632 009 - Rs. 31000 /-
3. V - LEAD IT Solutions.
   Sainathapuram, Vellore - 632 009 - Rs. 34700 /-

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரிக்கவும், செலவினம் ரூ. 27730/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது..
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம், மேலும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணியை செய்து முடித்து தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

19. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் - 12 அவர்களின் திண்டிவனம் நகராட்சியில் நடைபெற்ற புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் ஆய்வுக் கூட்டத்தில், தெரிவித்துள்ளதற்கிணங்க, ஆரணி நகராட்சியில் UIDSSMT திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதிய குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடநத் 2018ம் வரும் நவம்பர் மாதம் பணிகள் முடிவுற்றதாக தெரிவித்து ஒப்படைப்பு ஆவண கடிதம் வரப்பெற்றது. அதனை தொடர்ந்து ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணியாளர்களை விலக்கி கொண்டது. அன்று முதல் தொடர்ந்து நகராட்சி பணியாளரை கொண்டு இயக்கப்பட்டு வருகின்ற நிலையில், அத்தலைமை நீரேற்று நிலையத்தை முழுமையாக இயக்க போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், பொது மக்களுக்கு போதிய குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே, ஆரணி நகர பொது மக்களின் குடிநீர் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு, ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையத்தினை தனியார் வசம் ஒப்படைத்து இயக்கவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், உரிய அனுமதி வழங்க கோரி, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் -12 அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

20. ஆரணி நகராட்சி பிரதான சாலையான காந்தி சாலையில் அமைக்கப்பட்டுள்ள சென்டர் மீடியா மின் விளக்குகள் பழுதடைந்து ஒளிராமல் உள்ளது. பொது மக்களின் நலன் கருதி சென்டர் மீடியா மின்விளக்குகள் பழுது சரி செய்து இயக்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

21. ஆரணி நகராட்சி பிரதான சாலையான காந்தி சாலையில் அமைக்கப்பட்டுள்ள சென்டர் மீடியா மின் விளக்குகள் பழுதடைந்து ஒளிராமல் உள்ளது. அதனை சரி செய்ய முற்பட்ட போது அதன் கேபிள்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி சென்டர் மீடியா மின் விளக்கு கேபிள்களை புதியதாக மாற்றிட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

22. ஆரணி நகராட்சி பிரதான சாலையில் அமைந்துள்ள சென்டர் மீடியா மின்விளக்கு கம்பம் அருகில் இடைவெளி உள்ளதால், அவ்வழியே பொது மக்கள் சென்டர் மீடியா சுவற்றி மீது ஏறி கடப்பதால் விபத்து மற்றும் கேபிள் வயர்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு மின்விளக்குள் ஒளிராமல் போகிறது. எனவே, அதனை தவிர்க்கும் பொருட்டு இடைவெளிகளுக்கு நடுவே தடுப்பு சுவர் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

23. ஆரணி நகராட்சியில் குடிநீர் விநியோக பணிகளுக்காக 33 வார்டுகளிலும் சாலையின் ஓரங்களிலும், மற்றும் சாலையின் நடுப்பகுதியிலும் வால்வுகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி வால்வுகளில் அடிக்கடி ஏற்படும் நீர்க்கசிவுகளை சரி செய்ய சாலையினை சேதப்படுத்தி சரி செய்திட வேண்டியுள்ளது. மேலும், பெருவாரியான வால்வுகள் நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் உள்ள சாலைகளில் உள்ளதால், அவ்வப்போது நெடுஞ்சாலைத்துறையிடம் அனுமதி பெற்ற பின்னரே பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து வால்வுகளுக்கும் CHAMBER அமைத்திட ஆகும் தோராய செலவினம் ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 765/இ1/2019)

24. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி மையக் கட்டடத்தில் குழந்தைகள் தண்ணீர் வசதிக்காக ஆழ்துளை குழாய் கிணற்றில் பைப் இறக்கி மின்மோட்டார் பழுது சரி செய்து பைப் லைன் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.0.75 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 765/2019/இ1)

25. ஆரணி நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பழைய மின் உபகரணங்கள் குழல் விளக்குகள், ஸ்டாட்டர், சோக், சோடியம் விளக்கு, சோடியம் சோக், கண்டன்ஸர், இக்னேட்டர், குழல் விளக்கு பிட்டிங், சோடியம் பிட்டிங், தானியங்கி சுவிட் பாக்ஸ் ஆகியவை பொது ஏலத்தில் விட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 771 / 2019 / இ1)

**26. அரசாணை எண் 125 REVENUE AND DISASTER MANAGEMENT DEPARTMENT DISASTER MANAGEMENT WING. E.M.III(1) SECTION நாள் 28.05.2019 ல் இந் நகராட்சியில் தற்போது நிலவி வரும் வறட்சியை கருத்தில் கொண்டு பேரிடர் மேலாண்மை துறை, இந் நகராட்சியில் குடிநீர் விநியோகம் சீராக செயல்படுத்திட குடிநீர் அபிவிருத்தி பணிகள் செய்திட வறட்சி நிவாரண திட்டம் 2019ன் கீழ் பின்வரும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ. 105.60 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ. எண் | பணியின் விவரம்<br>வறட்சி நிவாரண திட்டம் 2019 | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் ஆற்றுப்படுகை மற்றும் வார்டு எண் 11 பாட்சா தெரு, வார்டு எண் 12 செல்வ விநாயகர் கோயில் தெரு, மற்றும் வார்டு எண் 27 முள்ளிப்பட்டு MGR நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 14.50 |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 10 அருணாசல ஈஸ்வரன் கோயில் தெரு, திருவள்ளுவர் தெரு, மற்றும் நேரு நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 5.00 |
| 3 | ஆரணி நகராட்சி வார்டு எண் 5 ஆண்டாள் சன்னதி தெரு, வார்டு எண் 17 கோபால் தெரு, வார்டு எண் 26 நாடகசாலை பேட்டை தெரு, வார்டு எண் 29 காந்தி நகர் முதல் தெரு, வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர், வார்டு எண் 31 கோட்டை மேற்கு தெரு வார்டு எண் 28 அனந்தபுரம் தெரு, வார்டு எண் 20 சூரியகுளம் தெற்கு தெரு, ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 14.50 |
| 4 | ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 பாதர் சுபேதார் தெரு மற்றும் மாரியம்மன் கோயில் தெரு, வார்டு எண் 23 சுப்பிரமணிய சாமி கோயில் தெரு, வார்டு எண் 14 சபாஷ்கான் தெரு, வார்டு எண் 16 வேதபுரிஈஸ்வரன் கோயில் தெரு, வார்டு எண்22 முனுசாமி தெரு, வார்டு எண் 13 CPM தெரு, வார்டு எண் 17 தருமராஜா கோயில தெரு ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் | 11.00 |

| | | |
|---|---|---|
| | பணி | |
| 5 | ஆரணி நகராட்சிக்குட்பட்ட கமண்டல நாகநதியில் மற்றும் தரைப்பாலம் பகுதியில், வார்டு எண் 14 கண்ணகி நகர், வார்டு எண் 22 சாமி தெரு, வார்டு எண் 16 திருப்பூர் குமரன் தெரு, வார்டு எண் 10 முருகப்பன் தெரு, வார்டு எண் 19 வடியராஜா தெரு மற்றும் சின்னசாயக்காரத் தெரு, ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 15.00 |
| 6 | ஆரணி நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகள் 10 எண்ணிக்கை (FLUSING) செய்து சுத்தம் செய்தல், | 2.00 |
| 7 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் தலைமை நீரேற்று நிலையம் (செய்யாறு ஆற்றுப்படுகை) மற்றும் கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலைய நீர் உறிஞ்சு கிணறுகள் புனரமைக்கும் பணிகள் | 12.00 |
| 8 | ஆரணி நகராட்சி பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 15.00 |
| 9 | குடிநீர் விநியோக பணிக்கு தேவையான குடிநீர் சேமிக்கும் HDPE தொட்டிகள் விநியோகம் செய்தல் | 4.00 |
| 10 | ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் மற்றும் மின்விசை பம்புகள் 20 எண்ணிக்கை பழுது சரி செய்து மாற்றி அமைத்தல் | 7.60 |
| 11 | ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள 5 எண்ணிக்கை கைபம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைத்தல் | 5.00 |
| | மொத்தம் ரூ. | 105.60 |

அலுவலக குறிப்பு 1. மன்றம் பதிவு செய்யலாம், 2. குடிநீர் அவசியம் கருதி பொது மக்களின் நலனை கருத்தில் கொண்ட அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். 3. மேலும், மேற்படி பணிகள் வறட்சி நிவாரண நிதி அல்லது நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1135/இ1/2019.)

தனிஅலுவலர்,
ஆரணி நகராட்சி